
Koviloor Digital Library



ACC NO:-
35776

முருகு

Koviloor Digital Library



யாம் இருக்கும் இடத்தில் சகல செல்வங்களும் கொழிக்கும்

ஸ்ரீ கற்பக விநாயகர்

பிள்ளையார்பட்டி

தும்பிக்கையான் துதிபாடி
நம்பிக்கையுடன் வாழ்வோம்.

அன்புடன் :

C.S.நாச்சியப்பன் குடும்பத்தினர்,

கண்டனூர்.



Koviloor Digital Library

3-6

முருகு



இலவச வெளியீடு

2019

பழனி பாதயாத்திரை மலர்
முப்பத்து எட்டாம் ஆண்டு
விளம்பி ஆண்டு

"மனிதத்தேனீ"

ரா.சொக்கலிங்கம்,

விஜயா பிரிண்டர்ஸ்

114/2, டி.பி.கே.ரோடு, மாலைமுரசு அருகில்,மதுரை - 625 001.

போன் : 4370829,73055 33980 செல் : 98421 88991

e-mail : manithatheni1959@gmail.com
vijayaprinters1947@gmail.com
www.manithatheni.com
facebook : www.facebook.com / chockalingam.raman
youtube : Manithatheni Chockalingam
Twitter : @ vijayaprinters, Whatsapp : 98421 88991

Koviloor Digital Library

பள்ளியறையில் ஆடுகவே



ஆடுக ஊஞ்சல் ஆடுகவே!
பள்ளி அறையில் ஆடுகவே!
ஆடுக ஊஞ்சல் ஆடுகவே!
அம்மை அப்பா ஆடுகவே!

(ஆடுக)

கங்கை நிலாமதி சுமந்தவனே!
கண்கள் மூன்று உடையவனே!
அங்கை அனலைக் கொண்டவனே!
ஆலம் உண்ட தலைமகனே!

(ஆடுக)

மான்மழு ஏந்திய கரம் உடையாய்!
மக்களைக் காக்கும் அருள் உடையாய்!
தேனின் மெழுகாய் உருகிடவே
திவ்விய தரிசனம் தந்திடுவாள்!

(ஆடுக)

தேவரும் காணாத் திருவடிகள்!
தேவியைத் தேடி நடந்திடுமே!
யாவரும் உன்றன் துதிபாடி
அன்னையைக் காணத் தொடர்ந்திடுவார்!

(ஆடுக)

முத்துச் சிவிகை ஏறிடுவாய்!
முல்லை மணத்தில் சிரித்திடுவாய்!
நத்தி நாங்கள் உனைச்சுமந்து
நாளும் வருவோம் பள்ளிஅறை!

(ஆடுக)

Koviloor Digital Library



சோதிச் சுடரே! திருமணியே!
சுந்த ரேச மணிவிளக்கே!
பாதிப்பாகம் கொண்டவளைப்
பார்க்க நிதமும் சென்றிடுவாய்! (ஆடுக)

முன்னே வந்த திருநந்தி
முன்னர் காவல் இருந்திடவே,
அன்னை மீனாள் அருகிருக்க
அப்பா ஊஞ்சல் ஆடுகவே! (ஆடுக)

சொற்பதம் கடந்த தெய்வதமே!
சுந்த ரேசப் பெருமானே!
கற்பக மான மீனாட்சி
கைகளைச் சேர்த்து ஆடுகவே! (ஆடுக)

புவன நாயகி உடனிருக்கப்
பொன்னின் ஊஞ்சல் ஆடுகவே!
அவனி சிறக்க அருள்தந்து
அன்போடு ஊஞ்சல் ஆடுகவே! (ஆடுக)

நம்மை காப்பது சிவசக்தி!
நல்லறம் வளர்ப்பது சிவசக்தி!
மெய்மைப் பொருளே சிவசக்தி!
மேலான தெய்வம் சிவசக்தி! (ஆடுக)

வாரம் தோறும் தவறாமல்
வந்தே பணிவோம் சிவசக்தி!
பாரச் சுமையைப் போக்கிடுவாய்!
பாரில் வளம்பெறச் செய்திடுவாய்! (ஆடுக)

சோலைக் கிளியே மீனாட்சி!
சொல்லின் செல்வர் சுந்தரனே!
வேலை தந்து காத்திடுவீர்!
வேண்டும் வரங்கள் தந்திடுவீர்!
(ஆடுக)

Koviloor Digital Library



மரகத வண்ணப் பேரழகே!
    மாயோன் போற்றும் சோதரியே!
பரசிவம் தழுவும் பார்வதியே!
    பாரில் எம்மைக் காத்திடுவாய்! (ஆடுக)

வெள்ளிக் கிழமை வந்திடுவோம்!
    வேண்டி உமையைப் பணிந்திடுவோம்!
பள்ளி அறையைத் தரிசிக்கப்
    பாங்காய் மணமே முடித்திடுவீர்! (ஆடுக)

மாலை சூட்டி மகிழ்ந்திடுவோம்!
    மனத்தில் என்றும் நினைந்திடுவோம்!
மாலை மாற்றி மணம்புரிய
    மங்கல நாயக! அருள்புரிவீர்! (ஆடுக)

பாதச் சலங்கை ஒலியினிலே
    பரம சிவனும் மயங்கிடுவான்!
நாதம் தந்திடும் வீணையிலே
    நாயகி மீனாள் மகிழ்ந்திடுவாள்! (ஆடுக)

பள்ளி அறையில் வணங்கிடுவோம்!
    பாலும் தேனும் படைத்திடுவோம்!
பிள்ளை வரமே தந்திடுவீர்!
    பெற்றே நாங்கள் மகிழ்ந்திடுவோம்! (ஆடுக)

பரமன் உண்ட விஷம் கூடப்
    பாவை உன்னால் அமுதாகும்!
பரமேச் வரிநீ காத்திடுவாய்!
    பாரில் நோய்கள் போக்கிடுவாய்! (ஆடுக)

கேட்டதைக் கொடுக்கும் திருவடிகள்!
    கேட்பது எல்லாம் உன்மொழிகள்!
பாட்டினில் வாழும் பரசிவமே!
    பகவதி துணையுடன் காத்திடுவீர்! (ஆடுக)

Koviloor Digital Library

பொறுமை யுடனே நடந்திடுவோம்!
புதிய வாழ்வு அடைந்திடுவோம்!
வறுமை யின்றி வளம் பெறுவோம்!
வாழ்வு சிறந்து நலம் பெறுவோம்! (ஆடுக)

வேலவா ! வேலவா!



வேலவா வேலவா வினைகள் தீர்க்கும் வேலவா
வேலவா வேலவா வினைகள் தீர்க்கும் வேலவா!
பந்த பாசம் சொந்தமின்றிப் பழநி சென்ற வேலவா
பார்வதியாள் பெற்றெடுத்த பன்னிருகை வேலவா
கந்தனாகச் சிந்தைவாழும் கருணைமிக்க வேலவா
காண்பதற்கு வந்தஎங்கள் கவலைதீர்க்கும் வேலவா
எந்தசோகம் வந்தபோதும் சொந்தமாகும் வேலவா
ஏழைமக்கள் யாவருக்கும் இன்னல் தீர்க்கும் வேலவா
சிந்துபாடி வந்த பக்தர் சிக்கல் தீர்க்கும் வேலவா
செய்தபாவம் போகவேண்டும் செந்திலாளும் வேலவா
(வேலவா)
வெள்ளிவேலும் துள்ளிமோத வீறுகொண்ட (வேலவா)
வேங்கையாக நின்றுகாதல் வெற்றிகண்ட வேலவா
வள்ளியோடு உள்ளம் ஒன்றி வாழ்வுதந்த வேலவா
வாடிவந்த உயிர்களுக்கு வரமளிக்கும் வேலவா
உள்ளுதோறும் உள்ளுதோறும் உணர்வளிக்கும் வேலவா
உன்னை நாடி வந்தவர்க்கு உரமளிக்கும் வேலவா

Koviloor Digital Library

கொள்ளையாகப் பிள்ளையின்பம் கொட்டுகின்ற வேலவா
கூறுகின்ற எங்கள் உள்ளக் குறைதவிக்கும் வேலவா
(வேலவா)

பற்றுபாசம் முற்றறுத்துப் பழநிசென்ற வேலவா
பக்தியோடு வந்தவர்க்குப் படியளக்கும் வேலவா
குற்றமேதும் அற்று நெஞ்சு குளிர வேண்டும் வேலவா
குன்றுதோறும் நின்றுவாழும் குழந்தைவடி வேலவா

உற்றநோய்கள் முற்றும்தீர உதவவேண்டும் வேலவா
உன்னருளால் பகைமையிருள் ஓடவேண்டும் வேலவா
கற்றுபாடம் வெற்றியாகக் கனியவேண்டும் வேலவா
கருணைதங்க வெகுளியோடக் கைகொடுப்பாய் வேலவா
(வேலவா)

டாக்டர்.சி.சௌ.கருப்பன்செட்டி, கண்டனூர்.

காடேரி அம்பாள் வருவாயே



வருவாய் வருவாய் காடேரி
கருப்பனின் தங்கை நீதானே!
வருவாய் வருவாய் காடேரி
கருப்பனின் தங்கை நீதானே!

உள்ளம் மலர மலர் வைத்தேன்
எண்ணம் மலர வந்து நின்றாய்!
ஒளியாய் வந்து அருள்தரவே
உத்தமி காடேரி வருவாயே!

Koviloor Digital Library



பாதம் தொட்டு வணங்கு
பார்வையில் நிற்பாள் பாரு!
பாசம் இதுவென காட்டு
காடேரி வருவாய் பாரு!

நல்லது நடக்க துணையிருக்க!
மலர்விழி காட்டும் காடேரி
மனதினில் உயர்ந்த நாயகியே
மனையினில் வருவாய் என்தாயே!

நாளென்றும் பொழுதென்றும் போகும்
மனதினில் கவலைகள் ஓடும்!
மலைபோல் உயர்ந்த காடேரி
இறங்கி வந்தால் ஆகாதா!

சண்டி சங்கரி மாகாளி
சூலம் ஏந்தி வந்திடுவாள்!
தத்துவ நாயகி காடேரி
சலங்கை கட்டி வந்திடுவாள்!

தொட்டது துலங்க துணையிருப்பாய்!
விட்டது யாவும் நீயறிவாய்!
பட்டது போதும் நில்லடியே!
கிட்டே வந்து பாரடியே!

கருப்பனின் தங்கை நீதானே!
கருணையின் வடிவம் நீதானே!
காவல் தெய்வமும் நீதானே!
கண்போல் காப்பாய் .காடேரி!

கவிஞர் *சபா.* மோகன், தேவகோட்டை

Koviloor Digital Library

கந்தனெனும் மந்திரம்



(சுட்ட திருநீறெடுத்து என்ற பண்)

கந்தனெனும் மந்திரத்தைச் சொன்னதுமே பாவனினை
காதவழி பறந்துமிக ஓடுமே - என்றும்
சொந்தமென வேலனடி சிந்தையிலே கொள்பவர்க்கு
சீர்மிகுந்து செல்வமெலாம் கூடுமே

ஆறுமுகன் பேரதனை நூறுதரம் சொல்லிவர
ஆட்டுகின்ற துன்பமெலாந் தீருமே - நாளும்
கூறுமடி யாரினிடர் கொல்லுகின்ற வேல்முருகன்
கோவலடி வழகதனைக் கூறுமே;

சூரறுத்த வீரமுகன் தூயபுகழ் பாடிவந்து
தோள்களிலே காவடியை ஏந்துவோம் வாழ்வில்
சீர்மிகுந்து நல்லசெல்வம் சிந்தை நல மத்துணையும்
சேர்ந்திடுவான் கையிரண்டை ஏந்துவோம்

வள்ளிமண வாளனென்று சொல்லிமிக அன்புகொண்டு
வந்திடுவோர் துன்பமெல்லாம் மாயுமே - நெஞ்சை
அள்ளுகின்ற கொள்ளையழ குள்ளமகன் முருகனவன்
அடியிரண்டில் தலையதனைச் சாயுமே :

வேல்முருகன் என்றுசொல்ல வினைகளெல்லாம் தூளாகி
விட்டுநம்மைக் காததூர ஓடுமே - எந்த
நாளுமவன் சேவடியை நல்லிதயத் துள்வைக்க
நல்வினைகள் தேடிவந்து கூடுமே

பொற்கிழிக் கவிஞர். *ச.சவகர்லால்,* காரைக்குடி-2.

Koviloor Digital Library

கந்தன் போட்ட கணக்கு



கந்தன் போட்ட கணக்கு
தெரியவில்லை நமக்கு
வேலன் போட்டகணக்கு விதவிதமாய் இருக்கு
ஒன்றும் ஒன்றும் இரண்டு
ஓம் எழுத்தும் இரண்டு (கந்தன்)
இரண்டும் இரண்டும் நான்கு ...
இனிய வேதம் நான்கு ...
மூன்றும் மூன்றும் ஆறு ...
நான்கும் நான்கும் எட்டு ...
நமக்குத் திசைகள் எட்டு ...
ஐந்தும் ஐந்தும் பத்து ...
அவன் அரும் பெரும் சொத்து
சுப்பன் போட்ட கணக்கில் ...
தப்பு எதுவுமில்லை ...
கணக்குப்படி நடந்தால் ...
பிணக்கு எதுவுமில்லை ...
எனக்கு அவனும் சொன்னான் ...
உனக்கும் நானும் சொன்னேன் ...

லெக்ஷ்மணன் காரைக்குடி

Koviloor Digital Library



காவடியாம் காவடி

காவடியாம் காவடி கந்தவேலன் காவடி
கண்கொள்ளாக் காட்சிதரும் கடம்பனுக்குக் காவடி

வேல்முருகன் நாமத்திலே விதவிதமாய்க் காவடி
வெற்றிவேலன் காவடி வீரவேலன் காவடி

சிங்கார வேலனுக்குச் சின்னச்சின்ன காவடி
வண்ணமயில் தோகையோடு ஆடிவரும் காவடி

பழநிமலை பாலனுக்கு பால்குடத்தால் காவடி
தென்பழனி வேலனுக்கு தேன்குடத்தால் காவடி

சுவாமிநாத வேலனுக்கு சந்தனத்தால் காவடி
பாலசுப்ரமணியனுக்கு பஞ்சாமிருதக் காவடி

ஆறுமுக வேலனுக்கு அழகுமயில் காவடி
வண்ணவண்ணக் காவடி வெற்றிவேலன் காவடி

மயூர நாதனுக்கு மச்சத்தாலே காவடி
குன்றக்குடி குமரனுக்கு குறைவில்லாத காவடி

பக்தரெல்லாம் கொண்டாடும் காவடியாம் காவடி
பாமாலை பாடிஆடி நாடிவரும் காவடி

கண்டுகொள்ளாக் காட்சிதரும் கந்தவேலன் காவடி
காவடியாம் காவடி காணவேண்டும் காவடி

Koviloor Digital Library

விநாயகர் துதி



ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்துஅடி போற்றுகின் றேனே! - திருமூலர்

கணபதி என்றிடக் கலங்கும் வல்வினை
கணபதி என்றிடக் காலனும் கைதொழும்
கணபதி என்றிடக் கரும மாதலால்
கணபதி என்றிடக் கரும மில்லையே! - திருமூலர்

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான்தருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ்மூன்றுந் தா! - ஔவையார்

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூங்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கை யான்பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு! - ஔவையார்

திருவாக்கும் செய்கருமங் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை! - கபிலர்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைதணி விப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையில்
கண்ணிற் பணிமின்றி கனிந்து! - *கபிலர்*

Koviloor Digital Library

அப்பன் பழனி அப்பனடா



அப்பன் பழனி அப்பனடா அவன்
அரும் பெரும் திரவியக் கப்பலடா
அற்புதம் காட்டும் தலைவனடா - அவன்
அன்புக்கு பணி செய்யும் இறைவனடா!

காண்போம் நாம் அவன் படைவீடு - தம்பி
கால்வலி மறந்து நடைபோடு
கண்டால் நமக்கில்லை ஒருகேடு - நீ
காவடி எடுத்து நடமாடு!

வணிகனின் குலத்துக்குத் தாயாவான் - அவர்
வளவினில் ஓடிடும் சேயாவான்
கவிஞர்கள் பாட்டுக்கு வாயாவான் எங்கு
கடும்பகை கண்டாலும் தீயாவான்

ஆண்டிக்குப் பாரடி சாத்துப்படி - நாம்
ஆடிடப் பழனியிலே தீர்த்தமடி
வேண்டிடும் வரம்தரும்படி தீபமடி - இதில்
வேதனையை இலை லாபமடி

பழனிக்குப் போவதில் சுகம் அதிகம் - அவன்
பார்வையில் நிற்பதில் குணம் அதிகம்
விழுந்து வணங்கினால் வயததிகம் அந்த
வீரன் தருவன் பணமதிகம்!

Koviloor Digital Library



செட்டிமக்கள் இந்தப் பூமியிலே பல
தெய்வத்துக் களித்தது கோடியம்மா
கட்டிய கோவில்கள் ஆயிரமே - அதில்
கந்தனின் கோவில்கள் யாவையுமே!

முருகப்ப னில்லாத ஊருமில்லை ஒரு
முத்தைய னில்லாத வீடுமில்லை
பழனியப்ப னின்றி வம்சமில்லை - எங்கள்
பரம்பரைக் கவனின்றி அம்சமில்லை!

கால்நடைப் பயணத்தில் ஓடிவந்தோம் - உன்
கருணைக்குத் தானுனைத் தேடி வந்தோம்
வேலெமைக் காக்கட்டும் வேலவனே உன்
விழிஎமை காக்கட்டும் நாயகனே

தண்டாயுதபாணி




ஆண்டிக் கோலம் கொண்டாலும்
அள்ளிக் கொடுக்கும் வள்ளல்நீ!
வேண்டும் வரங்கள் தந்திடுவாய்!
விரும்பும் அனைத்தும் நீ தருவாய்!

தோண்டத் தோண்ட அருள்சுரக்கும்
தூய பக்தி நீரூற்று!
காண்டற் கெளிய ஆண்டவனே!
கைகள் கொடுத்து மேலேற்று,!

Koviloor Digital Library

திருநீற்றுப் பதிகம்



மந்திர மாவது நீறு
வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு
துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு
சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன்
திருவா லவாயன் திருநீறே!

வேதத்தி லுள்ளது நீறு
வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு
புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தருவரு நீறு
உண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த
திருவா லவாயன் திருநீறே!

முத்தி தருவது நீறு
முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு
தக்கோர் புகல்வது நீறு
பத்தி தருவது நீறு
பரவ வினியது நீறு
சித்தி தருவது நீறு
திருவா லவாயன் திருநீறே!

Koviloor Digital Library



காண வினியது நீறே
கவினைத் தருவது நீறு
பேணி யணிபவற் கெல்லாம்
பெருமை கொடுப்பது நீறு
மானந் தருவது நீறு
மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு
திருவா லவாயன் திருநீறே!

பூச வினியது நீறு
புண்ணிய மாவது நீறு
பேச வினியது நீறு
பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கொடுப்பது நீறு
அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு
திருவா லவாயன் திருநீறே!

அருத்த மாவது நீறு
அவல மறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு
வான மளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு
புண்ணியர் பூசும்வெண் ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த
திருவா லவாயன் திருநீறே!

எயிலது அட்டது நீறு
இருமைக்கு முள்ளது நீறு

Koviloor Digital Library



பயிலப் படுவது நீறு
பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு
சுத்தம தாவது நீறு
வயிலைப் பொலிதரு சூலத்
தால வாயான் திருநீறே!

இராவணன் மேலது நீறு
எண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு
பாவ மறுப்பது நீறு
தராவண மாவது நீறு
தத்துவ மாவது நீறு
வராவ ணங்குத் திருமேனி
ஆல வாயான் திருநீறே!

மாலோ டயனறி யாத
வண்ண முள்ளது நீறு
மேலுறை தேவர் கடங்கண்
மெய்யது வெண்பொடி நீறு
ஏல வுடம்பிடர் தீர்க்கும்
இன்பம் தருவது நீறு
ஆலமு துண்டு மிடற்றெம்
ஆலய வாயான் திருநீறே!

Koviloor Digital Library



குண்டிகைக் கையர்க ளோடு
சாக்கியர் கூட்டமுங் கூடக்
கண்டிகைப் பிப்பது நீறு
கருத விளிய நீறு
எண்டிசை பட்ட பொருளார்
ஏத்துந் தகையது நீறு
அண்டத் தவர்பணிந் தேத்தும்
ஆலவா யான்திரு நீறே!



ஆறெழுத்து மந்திரம்

சுட்டதிரு நீறெடுத்துத் தொட்டகையில் வேலெடுத்துத்
தோகைமயில் மீதமர்ந்த சுந்தரம் - அந்தக்
கட்டழகு கொண்டதொரு கந்தவடி வேலவனைச்
சாற்றுவது ஆறெழுத்து மந்திரம் (சுட்ட)

ஆறெழுத்து மந்திரத்தைத் தந்ததொரு சுந்தரத்தை
அந்திபகல் சிந்தனைசெய் நெஞ்சமே - அந்த
ஆறெழுத்து மந்திரத்தை யாரெடுத்து ஓதினாலும்
ஆறுமுகம் வந்துநிற்கும் முன்னமே. (சுட்ட)

கந்தனடி யேநினைத்து சங்கத்தமிழ் மாலைகொண்டு
வந்தனைசெய் வோர்கள்மனம் ஆறுமே - பரங்
குன்றவளர் குகனோடு தங்கிவர வேநமக்கும்
பொங்கிவரும் செல்வம்பதி னாறுமே (சுட்ட)

- சௌந்தராகைலாசம்

Koviloor Digital Library

இரத்தினவேல் காவடி



சின்னச்	சின்னக்	காவடி
செந்தில்	நாதன்	காவடி
வண்ண	வண்ணக்	காவடி
வள்ளி	நாதன்	காவடி
இங்கும்	அங்கும்	காவடி
ஏர	கத்தான்	காவடி
அங்கும்	இங்கும்	காவடி
ஆட்டம்	ஆடும்	காவடி
ஆண்டி	யப்பன்	காவடி
பாட்டும்	பாடும்	காவடி
பழனி	யப்பன்	காவடி
முன்னும்	பின்னும்	காவடி
முருக	வேலன்	காவடி
கண்ணும்	மனமும்	காவடி
கந்த	வேலன்	காவடி
இரத்தின	வேல்	காவடி
இன்ப	மூட்டும்	காவடி
பழனி	மலைக்	காவடி
பஞ்சம்	தீர்க்கும்	காவடி
சென்னி	மலைக்	காவடி
சேவற்	கொடியோன்	காவடி
தண்ணீர்	மலைக்	காவடி
தாகம்	தீர்க்கும்	காவடி
பாலும்	பழமும்	காவடி
பஞ்சா	மிர்தக்	காவடி
வேலும்	மயிலும்	காவடி
வினைகள்	தீர்க்கும்	காவடி

Koviloor Digital Library

பாதயாத்திரை பாடல்



காடு மேடெல்லாம் கடந்து வந்தோம்
அய்யா முருகய்யா
நாடு செழிக்கவும் வீடு சிறக்கவும்
அருளைத் தருகைய்யா
பழம் வேண்டி மலைக்கு வந்த
அய்யா முருகய்யா
அருள் வேண்டி நாடி வந்தோம்
வாரி வழங்கைய்யா.
சின்னப் பிள்ளைகளும் நடக்குது
சிங்காரமாக இருக்குது.
சந்தன வாசம் மணக்குது
தன்னாலே கால் நடக்குது
வந்தவர் யாவர்க்கும் இனி நல்ல நேரம்
(காடு மேடெல்லாம்)

குன்றுதோறும் நீயிருந்து குறைகள் தீர்ப்பது போல்
பாமாலை பாடி உந்தன் புகழை நான் சொல்லவா
'பக்தி கொண்ட மனதினிலே ஆனந்தம் இருக்கு
பன்னிரண்டு கண்திறந்து பார்ப்பது போலிருக்குது.
(காடு மேடெல்லாம்)

அரகரோ சொல்லியே அன்னதானம் செய்து
ஆண்டாண்டு வரட்டுமா
மானுட வாழ்வில் மங்களம் கூட
உன்புகழ் சொல்லட்டுமா. (காடு மேடெல்லாம்)

உமா சுப்பிரமணியன்

Koviloor Digital Library

காக்க வேண்டும் முருகா

(விருத்தம்)



சீராக வடிவாகச் செவ்வான எழிலாகச்
        சிவகாமி ஈன்ற திருவே!
சிலையாக நின்றாலும் செந்தேனில் இதழூறச்
        சிரிக்கின்ற கொள்கை அழகே!
நீராக உயிராக நிலையான பொருளாக
        நெஞ்சோடு சேர்ந்த குமரா!
நெறியோடு தமிழ்பாடி நிழல்தேடும் அடியாரின்
        நிலம்காக்க வேண்டும் முருகா!
கார்கால ஒளியாகக் கடலோரம் விளக்காகக்
        கரைகாட்டும் அன்பு வடிவே!
கதிர்காமக் கதிராகக் கடல்தாண்டிச் சுடரான
        கயிலாயன் பெற்ற திருவே!
கூர்வேலின் அறியோடு குலஞானக் கொழுந்தாகிக்
        குன்றேறி நின்ற குமரா?
குயிலாகக் தமிழ்பாடிக் கொண்டாடும் அடியாரின்
        குடிகாக்க வேண்டும் முருகா!
கலைமேவும் பரங்குன்றில் கவினார்ந்த தேவானை
        கைகோர்க்க வந்த எழிலே
கானேகிக் கிழமாகிக் கண்வீசிக் குறமாதைக்
        களவாடி சென்ற அழகே!
மலையேறிக் தேரேறி மனம்ஊறும் அமுதாக
        மயிலேறி வந்த குமரா!
மணியான தமிழ்கூறி மலையேறும் அடியாரின்
        மனைகாக்க வேண்டும் முருகா!
அமிழ்தூறும் தமிழ்பேசி அப்பாவுக் குபதேசம்
        அறிவோடு சொன்ன குருவே!
ஆறாகப் படைவீடும் அதுபோல முகம் ஆறும்
        அழகாகப் பெற்ற திருவே!

Koviloor Digital Library



சிமிழாக மலராகச் செந்தூரின் நிலவாகச்
சிரித்தாட வந்த குமரா!
சிங்காரத் தமிழ்பாடிச் சேர்ந்தேகும் அடியாரின்
சேய்காக்க வேண்டும் முருகா!

பாலோடு தேனாகிப் பண்ணாகி இசையாகிப்
பழமான இனிய சுவையே!
பண்டாரம் ஆனாலும் படியேறி உனைநாடின்
பசிதீர்க்கும் அமுத மழையே!
வேலோடு வேல்மோதி வேரோடு வன்சூரர்
வினைதீர்த்து வென்ற குமரா!
வேலாஉன் விழிகாண விரைந்தேகும் அடியாரின்
விழிகாக்க வேண்டும் முருகா!
அஞ்சாமை நெஞ்சேற அறிவூக்கம் தனைஊட்டி
அணைத்தாள் வேண்டும் அழகே!
அலைபாயும் மனம்மாற அழிவான சினம்ஓட
அருள்காட்ட வேண்டும் அரசே!
நெஞ்சான் பதிவேட்டில் நிகரேதும் இல்லாமல்
நிலையாகி உள்ள குமரா!
நெல்லோங்கப் பயிரோங்க நிதியோங்க நெறிகாட்டி
நீகாக்க வேண்டும் முருகா!

டாக்டர் *சி.சௌ.கருப்பன்செட்டி*, கண்டனூர்



இனிய வாழ்த்துக்கள்

K.T. வாசன்

S/o. V. கண்ணப்பன்

(அலவாக்கோட்டை), திருநகர், மதுரை - 6.

Koviloor Digital Library

வாழ்க நீ எம்மான்!

கவிஞர்கள் போற்றும் காந்தியடிகள்

வாழ்க நீ எம்மான் இந்த
    வையத்து நாட்டில் எல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி
    விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்றதாம் ஓர்
    பாரத தேசம் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
    மஹாத்மா! நீ வாழ்க! வாழ்க!

- மகாகவி பாரதியார்

சத்தியத்தால் மன்னனரிச் சந்திரனை, தண்ணருளால்
புத்தபெரு மானையொத்த புண்ணியனை, - உத்தமனாம்
அந்தணனை, காந்தி அடிகளை அன்போடு
சிந்தனை செய் நெஞ்சே தினம்

- கவிமணி

சொல்லுவது எல்லார்க்கும் சுலபம் ஆகும்
    சொன்னபடி நடப்பவர்கள் மிகவும் சொற்பம்
எல்லையின்றி நீதிகளை எழுதுவார்கள்
    எழுதியது பிறருக்கே தமக்கென் றெண்ணார்
தொல்லுலகில் நாம் அறிந்த தலைவர் தம்முள்
    சொன்னதுபோல் செயல் முயன்றார் இவரைப் போல
இல்லையெனும் மோகனதாஸ் கரம்சந்த் காந்தி
    இந்தியத்தாய் உலகி னுக்கே ஈந்த செல்வம்

- நாமக்கல் கவிஞர்

Koviloor Digital Library

இன்னல் செய்தார்க்கும் இடர்செய்திடாமல்
இராட்டினம் சுற்றென்று சொல்லும் - எங்கள்
ஏதம் இல் காந்தியடிகள் அறச் செயல்
வெல்லும் - வெல்லும் - வெல்லும்
(ஏதம் - குற்றம்)

- பாவேந்தர் பாரதிதாசன்

எவ்வுயிர்க்கு உயிராம் ஈசன்
இணையடி வாழ்க ஐயன்
செவ்விய வடிவம் ஆகும்
திருவருள் இயற்கை வாழ்க
அவ்விரு தொடர்பு கண்ட
அடிகளார் காந்தி வாழ்க
இவ்வுல கெங்கும் அன்னார்
எழில் நெறி வாழ்க வாழ்க.

- திரு.வி.க.

சிறியதொரு கத்தர்ப்பை பக்கம் தோன்றும்
தினம் படிக்கும் ஒரு கீதை அதனுள் தோன்றும்
மறையெழுதும் ஒரு சிறிய குச்சி தோன்றும்
வனப்புயர்ந்த இராட்டொன்று திருமுன் தோன்றும்
கறையெதுவும் இல்லாத கத்தர் மாலைக்
கயிற்றுடனே கடிகாரம் ஒன்று தோன்றும்
பொறியடக்கி ஆண்டபெரும் தகைமை தோன்றும்
பூவிலுயர் சபர்மதியெம் புனிதனார்க்கே
(கத்தர்ப் பை - கதர்த்துணிப்பை, சிறிய குச்சி - எழுதுகோல், இராட்டு - இராட்டை, கறை - குற்றம்)

- தமிழ்க்கடல் ராய.சொ.

Koviloor Digital Library

காந்தியைப் பற்றிய சிந்தனை

1 காந்தியின் வாழ்க்கை வரலாற்றை முதன் முதலாக எழுதியவர் ஜோசப் டோக். இரண்டாவதாக எழுதியவர் ரொமைன் ரோலண்டு. ரோலண்டும் காந்தியும் முதன் முதலாய்ச் சந்திக்கிறார்கள். இந்தச் சந்திப்புப் பற்றி ரோலண்டு பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்.

பல் இழந்து, மூக்குக் கண்ணாடி அணிந்த இச்சிறு உருவம், வெள்ளைத் துணி ஒன்றைப் போர்த்திக் கொண்டிருந்தது. முழங்கால்களுக்குக் கீழ் மறைக்கப்படவில்லை. இருகால்களும் ஒல்லியாக ஸ்டில்ட் கம்பிகள் போல் காணப்பட்டன. அவர் மொட்டையடித்திருந்தார். மிகச் சிறிய அளவு ரோமம் வளர்ந்திருந்தது. தலையை அவர் மூடிக் கொள்ளவில்லை ஆகையால் அது மழையில் நனைந்திருந்தது. நமக்குப் பிரியமான நாய் வாயைத் திறந்து கொண்டு வருவதுபோல என்னை நோக்கிவந்து வாயைத் திறந்து களங்கமற்ற சிரிப்புடன், கையை என் கழுத்தின்மேல் வீசிக் கட்டிக் கொண்டார். என் தோளின் மேல் அவருடைய கன்னத்தை வைத்துக் கொண்டு சாய்ந்தார். அவருடைய தலைமுடி சொரசொர என்று எனது கன்னத்தில் உராய்ந்தது. புனிதர் டோமினிக், புனிதர் பிரான்சிஸ் இருவரும் என்னை முத்தமிட்டதுபோல் நினைந்து மகிழ்ந்தேன்.

2. காந்தியிடம் அற்புதமான ஆத்மிக சக்தி இருக்கிறது. அதனால் அவர், தம்மைச் சுற்றியுள்ள சாதாரண மனிதர்களையெல்லாம் வீரரும் தியாகிகளுமாக மாற்றிவிடுகிறார். காந்தியின் முன்னிலையில், தகாத காரியம் எதுவும் செய்ய எவரும் வெட்கப்படுவார்கள்.

– கோகலே

Koviloor Digital Library

3. 'மகாத்மா'வுக்குத் தமிழ், 'அடிகள்.' - திரு.வி.க.

4. காந்தியடிகள் வட்ட மேசை மாநாட்டிற்காக இங்கிலாந்து சென்ற சமயத்தில், கில்ட்ஹாலில் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார். பேச்சு முடிந்ததும், சகோதரி மாட்ரிட் என்பவரது காரில் வேறோர் இடத்திற்குச் செல்ல வேண்டும் என முடிவு செய்திருந்தார். பேச்சு முற்றுப் பெற்றது. அடிகள் மண்டபத்திலிருந்து வெளியே வந்தார். பெருங்கூட்டம். மாட்ரிட்டின் மோட்டாரை எளிதில் கண்டுபிடிக்க முடியவில்லை. பலரும் தங்களது வண்டியில் ஏறுமாறு அடிகளை வேண்டினர். அக்காட்சியைச் சகோதரி மாட்ரிட் குறிப்பிட்டு எழுதிய கட்டுரையின் சிறுபகுதி வருமாறு : 'குளிர் அதிகம். மகாத்மா அதிக உடைகளை அணிந்திருக்கவில்லை. அதிக நேரம் அவர் காத்துக் கொண்டிருப்பதை என் மனம் விரும்பவில்லை. நான் அடிகளிடம் அணுகி, 'என் வண்டியை எதிர்பார்க்க வேண்டாம். ஏதேனும் ஒன்றில் ஏறிச் செல்வது நல்லது' என்றேன். அதற்கு அடிகள், "வேறு வண்டி வேண்டாம். உம்முடைய வண்டியை நோக்கிக் காத்திருக்கிறேன்" என்றார். அச்சொல் என்னைக் குளிர்வித்தது. 'அவருக்கென்று ஒன்றும் இல்லை. அதனால் எல்லாம் அவருக்கு உரியன' என்று ஏசுவின் அடியார் ஒருவர் அருளிய வாசகம் என் நினைவுக்கு வந்தது. மகாத்மாவுக்கென்று ஒரு மோட்டார் இல்லை. ஆனால் அவருக்கென்று மோட்டார்கள் சூழ்ந்தன.'

5. இயேசுவின் வாழ்க்கைத் தத்துவம் காந்தி வாழ்க்கையின் ஒழுக்கம் ஆகியது. கிறிஸ்து பெருமான் வாய்மொழி அடிக்கடி காந்தியடிகளால் ஓதப்படுகிறது. கிறிஸ்துவத்தின் தன்னலத் தியாகமும் இயேசுவின் மலைப் பொழிவும் அடிகளின் வாழ்க்கையாய்ப் பரிணமித்தன. 'உலகில் ஒரே கிறிஸ்து உதித்தார். அவர் சிலுவையில் அறையப்பட்டார்' என்று நீட்ஷே

Koviloor Digital Library

சொன்னான். அவன் இன்னும் சில நாள் உயிரோடு இருந்திருந்தால் தனது கருத்தை மாற்றியிருப்பான்.

- வெவெலின் பவிஸ்

6. காந்தியடிகளும் கஸ்தூரிபாவும் வாழ்ந்த தூய வாழ்க்கை, திருவள்ளுவர் அறத்துப்பாலில் வலியுறுத்திய நல்வாழ்க்கையேயாகும். திருக்குறளையும் அவர்களின் வாழ்வையும் சேர்த்துக் கற்பவர்க்கு, அவர்கள் திருவள்ளுவர் நெறியினர் எனவும் தமிழ்நாட்டில் பிறந்திருக்க வேண்டியவர்கள் எனவும் தெரிய வரும். ஆனால், காந்தியடிகள் தப்பித் தவறித் தமிழராய்ப் பிறந்திருந்தால், தமிழ் நாட்டுப் பத்திரிகைகள் அவருடைய பெயரும் உலகத்திற்குத் தெரியாமல் இருட்டடிப்புச் செய்து மறைத்திருக்கும். தமிழர்களும் ஏழெட்டுக் கட்சிகளாய்ப் பிரிந்து அவரைப் பழிப்பது தவிர வேறு வேலைகள் செய்யாமல் ஊக்கமுடன் எதிர்த்திருப்பார்கள். நல்ல காலமாகத் தமிழ்ப் பண்புகளுடன் அவர் எங்கோ பிறந்து வழிகாட்டினார்.

- டாக்டர். மு.வ.

எழுத்தாளர் ப.திருமலை தொகுப்பு

1. நோபல் அமைதி விருதுக்கு 1948 ஆம் ஆண்டு காந்திஜி தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். துரதிருஷ்ட வசமாக அந்த ஆண்டில் அவர் படுகொலை செய்யப்பட்டதால் நோபல் பரிசுக்குழு அந்த ஆண்டில் அமைதிக்கான நோபல் பரிசை யாருக்கும் வழங்கப்போவதில்லை என்று அறிவித்தது.

2. நோபல் பரிசு பெற்ற உலகத் தலைவர்களான மார்ட்டின் லூதர் கிங் ஜூனியர் (அமெரிக்கா), தலாய் லாமா (திபெத்), ஆங்க சான் சூ கியி (மியான்மர்), நெல்சன் மண்டேலா (தென் ஆப்ரிக்கா) அடோல்போ

Koviloor Digital Library

பெர்ஸ் எஸ்க்யுவெல் (அர்ஜென்டினா) ஆகியோர், தாங்கள் மகாத்மா காந்தியின் கருத்துகளால் ஈர்க்கப்பட்டதாய்த் தெரிவித்துள்ளனர். அத்தகைய பெருமை பெற்ற காந்திஜிக்கு நோபல் பரிசு கிடைக்கவில்லை. இதனால் நோபல் பரிசுக்குத்தான் பாதிப்பு. காந்திக்கு அல்ல.

3. காந்திஜி ஒரு வழக்கறிஞர். அந்தத் தொழிலில் 20 ஆண்டுகள் அவர் இருந்துள்ளார். எனினும், பெரும்பாலான வழக்குகளை அவர் சமரசம் செய்தே தீர்த்து விடுவார். இரண்டு தரப்பினரையும் அழைத்துப் பேசி சமரசத் தீர்வு கண்டுவிடுவார். 'இதனால் நான் எதையும் இழக்கவில்லை. பணத்தைக்கூட இழக்கவில்லை. கண்டிப்பாக என் ஆத்மாவையும்தான்' எனக் குறிப்பிடுகிறார்.

4. தென் ஆப்பிரிக்காவில் அவர் இருந்த காலத்தில் அவரின் ஆண்டு வருமானம், 15,000 டாலர்கள். இந்தத் தொகை இப்போதுகூட பல இந்தியர்களின் கனவுத் தொகையாக உள்ளது.

5. தென் ஆப்பிரிக்காவில் அவர் வெற்றிகரமான வழக்கறிஞராய்ப் பணத்தைக் குவித்தாலும் அவருக்கு மகிழ்ச்சியில்லை. காரணம் என்ன? அவரின் சக இந்தியர்கள் அங்கே வறுமையில் வாடினர். பசி, பட்டினியால் துவண்டிருந்தனர். அவர்களின் பசி, பிணியைப் போக்கத் தமது வருமானத்தின் பெரும் பகுதியை காந்திஜி செலவிட்டார்.

6. தம் வாழ்நாளில் காந்திஜி ஒருபோதும் அமெரிக்கா சென்றதில்லை. ஆனால், அந்நாட்டில் அவருக்கு ஏராளமான தொண்டர்களும் நண்பர்களும் இருந்தனர். அத்தகைய நண்பர்களில் ஒருவர், ஹென்றி போர்டு. அவருக்கு காந்தி தம் கையெழுத்திட்ட கை ராட்டையைப் பரிசாக வழங்கியிருந்தார். இரண்டாம் உலகப்போர்க் காலத்தில் அந்தக் கை ராட்டையை அவ்வப்போது

Koviloor Digital Library

சுழற்றிய போர்டு 'இந்த ராட்டை மகாத்மா காந்தி எனக்காக அளித்தது. இந்த ராட்டை மிகவும் எளிய இயந்திரவியல் தத்துவத்தைக் கொண்டது மட்டுமல்ல, ஆன்மீகத்திற்கும் உதவும். பொருளாதாரச் சுதந்திரத்தின் அடையாளச் சின்னம்' என்றார்.

7. இந்து சமுதாயத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் என்கின்ற ஒரு பிரிவு இருப்பதையும் மற்ற இந்துக்கள் தீண்டத்தகாதவர்களாக அவர்களைக் கருதுவதையும் காந்திஜி கடுமையாக எதிர்த்தார். தீண்டாமை இந்து மதத்தின் சாபக்கேடு என்று தொடர்ந்து சொல்லி வந்தார். அவர்களைப் பெருமைப்படுத்துவதற்காகவே கடவுளின் குழந்தைகள் அவர்கள் என்கின்ற அர்த்தத்தில் ஹரிஜன் எனவும் அவர் பெயர் சூட்டினார்.

8. காந்திஜிக்குப் புகைப்படக் கலைஞர்களைக் கண்டாலே பிடிக்காது. புகைப்படம் எடுப்பதையும் விரும்பாதவர் அவர். இதில் வேடிக்கை என்னவென்றால் அந்தக் காலத்தில் அதிகமாகப் புகைப்படம் எடுக்கப்பட்ட தலைவரே அவர்தாம்.

9. 'அஞ்சல் அட்டைகள்தாம் மிகவும் சிக்கனமான தகவல் தொடர்புச் சாதனம்' என்று கருதியவர் காந்திஜி.

10. உலகிலேயே காந்திஜிக்கு டாக்குமெண்டரி படம் எடுத்த முதல் நபர் ஏ.கே.செட்டியார் என்ற தமிழர். கடைசி வரை காந்தி பக்தராகவே வாழ்ந்து விளம்பரம் இன்றிப் பணிசெய்து மறைந்து போனார். காந்தியைப் பற்றிய டாக்குமெண்டரி படம் எடுப்பதற்காக மட்டுமே தம் சொந்த முயற்சியில் ஜப்பான் சென்று சினிமாப்பட நுணுக்கங்களைக் கற்றுக்கொண்டு தென் ஆப்பிரிக்கா மற்றும் இந்தியா முழுவதும் சுற்றுப்பயணம் சென்று காந்திஜியைப் பற்றிய பல அபூர்வக் காட்சிகளைப் பணம் கொடுத்து வாங்கித் தம்முடைய டாக்குமெண்டரியில் சேர்த்தாராம், அந்த காந்தி பக்தர்.

Koviloor Digital Library

11. காந்தியடிகள் தம்முடைய கிழிந்த துணிகளைத் தாமே தைத்துக்கொள்வார். ஒருவர் எவ்வளவுதான் வறுமையில் இருந்தாலும் உடுத்துகின்ற உடைகள் மிகத் தூய்மையாக இருக்க வேண்டும் என்று காந்திஜி விரும்புவார். அதை அவர் கடைசி வரை கடைப்பிடித்தார்.

12. லண்டன் பல்கலைக்கழகத்தில் படித்து அவர் அட்டர்னி ஆனார். நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றில் முதலில் வாதாடும்போது அவர் கால்கள் நடுங்கின. வாய் குழறியது. என்ன பேசுவது என்று தெரியாமல் குழம்பிய அவர் தோல்வியினால் கீழே உட்கார்ந்துவிட்டார்.

13. எளிய உணவுகளை உண்டு ஆரோக்கியமாக வாழ்வது எப்படி என்பதில் காந்திஜி முன்னுதாரணமாக இருந்தார். பழங்கள், வெள்ளாட்டுப் பால், ஆலிவ் எண்ணெய் போன்றவற்றை உட்கொண்டார்.

14. நமது தேசத்தந்தை மகாத்மா காந்தியடிகள் தமது வாழ்நாள்களில் எப்போதும் விமானப் பயணம் மேற்கொண்டதில்லை. அதிகாரம் இருந்தும் ஒரு துளிகூட ஆடம்பரத்தை விரும்பாத உத்தமர் அவர். தமது வாழ்க்கை முழுவதும் எளிமையாகவே வாழ்ந்து மறைந்தார்.

காந்தியின் சிந்தனை

1. எவனுக்கு நல்ல நூல்களைப் படிப்பதில் சுவையிருக்கிறதோ அவன், தனிமையை வெகு சுலபமாகக் கழித்துவிட முடியும். என் புத்தகங்களே என்னைக் காப்பாற்றின.

2. சதையை நகம் எவ்வளவு ஒட்டியிருக்கிறதோ அதைவிட அருகிலே கடவுள் நம்மை நெருங்கியிருக்கிறார்.

Koviloor Digital Library

3. 'நான்' என்ற ஆணவத்தை விட்டொழித்து, மனித சமூகம் என்னும் கடலிலே கலந்து கரைந்துவிடும் போதுதான், அந்தக் கடலின் பெருமையிலே நாம் பங்கு பெறுகிறோம். நம்மை என்னவோ தனித்துப் பிரிந்தவர்களாகக் கருதுவோமானால், நமக்கும் கடவுளுக்கும் இடையே தடைச் சுவர் ஒன்றை எழுப்பிக் கொண்டவர்களாவோம். தனித்துப் பிரிந்ததாக எண்ணும் இந்த உணர்ச்சியை நாம் கைவிடும்போது, கடவுளோடு ஒன்றிவிடுகிறோம். கடல் நீரின் ஒருதுளி, தன் தந்தையான கடலின் மாண்பிலே பங்கு பெறுகிறது. ஆயினும், இதை அது உணராதிருக்கலாம். ஆனால், கடலைச் சாராது தனித்து வாழ அந்த நீர்த்துளி முயலும் போது, அது வற்றி மறைந்துபோகும்.

4. சத்தியத்தை நாடிச் செல்பவர், தூசிக்கும் தூசியாகப் பணிவு கொள்ள வேண்டும். உலகம் தூசியைக் காலின் கீழ் வைத்து நசுக்குகிறது. ஆனால், சத்தியத்தை நாடுகிறவரோ அத்தூசியும் தம்மை நசுக்கும் அளவுக்குத் தம்மைப் பணிவுள்ளவராக்கிக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் சத்தியத்தின் ஒளியைக் கணப் பொழுதாவது காண முடியும்.

5. மோசமான கையெழுத்து அரைகுறையான படிப்புக்கு அறிகுறி. கையெழுத்து நன்றாக இருக்க வேண்டியதும் படிப்பின் ஒரு பகுதியே.

6. அதிகமாகப் பேசாதவர், யோசியாமல் பேச வாய்ப்பு இருக்காது.

7. ஒருவருடைய உள்ளம் மட்டும் தூயதாக இருக்குமானால், துன்பம் வந்ததுமே அதைச் சமாளிக்க ஆள்களும் கிடைப்பார்கள்; சாதனங்களும் கிட்டும் என்பது அனுபவத்தின் அடிப்படையில் எனக்கு ஏற்பட்டிருக்கும் நம்பிக்கை.

Koviloor Digital Library

8. கல்வி என்பதற்கு நான் கொண்ட பொருள் ஒழுக்கத்தைப் படிப்படியாக வளர்ப்பது என்பது.

9. மேல்நாட்டுப் பந்தாட்டங்கள் மகிழ்ச்சி தரக்கூடியவை என்றாலும், பொருட் செலவில்லாத நமது நாட்டு ஆட்டங்களை விட்டுவிடல் ஆகாது.

10. தென்னாப்பிரிக்காவில் நடந்த சத்தியாகிரகப் போரில் தமிழ்மக்கள் புரிந்த துணையைப் போல வேறு எந்த இந்தியரும் புரியவில்லை. அவர்களுக்கு நன்றியறிதல் காட்ட அவர்களுடைய நூல்களை வாசிக்க வேண்டும் என நினைத்தேன். அப்படியே அவர்களுடைய மொழியைக் கற்றுக் கொள்வதில் மிக ஊக்கமாக ஒரு மாதம் கழித்தேன். அம்மொழியைக் கற்கக் கற்க அதன் அழகை உணரத் தொடங்கினேன். அது மனம் கவரும் ஓர் இனிய மொழி. இந்தியாவில் ஓரினம் என்னும் ஒற்றுமை ஏற்பட வேண்டுமானால் சென்னை மாகாணத்துக்கு அப்புறம் உள்ளவர்களும் தமிழை உணர்தல் வேண்டும். தமிழ் மக்கள் என் இரத்தக் கலப்புற்ற உடன்பிறந்தவர் போலத் தோன்றுகிறார்கள்.

11. உண்மையும் அகிம்சையுமே என்னால் விரும்பப்படுவன. தெய்விகத்தை நான் விரும்பவில்லை.

12. பண்டைய நூல்கள் தெய்விகம் பொருந்தியவைகளே. ஆனாலும் அவற்றில் உள்ள பொருள்கள் எனது அறிவுக்குப் பொருந்தியவையாய் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் நூல்களின் கடவுள் தன்மையையும் நான் மறுப்பேன்.

13. அரசியலுக்கும் மதத்திற்கும் தொடர்பு இல்லை எனக் கூறுபவர் சமய நுட்பம் தெரியாதவர் எனத் தயங்காது கூறுவேன். மதத்திற்கு அரசியலும் ஒரு துணை. சமயம் அற்ற அரசியல் எமன் போன்றது.

Koviloor Digital Library

காந்தியின் வாழ்க்கை நிகழ்வுகள்

(1) குளிர் காலத்தில் கம்பளித் துணியைத் தலையில் கட்டிக் கொள்வது காந்தியடிகளின் வழக்கம். நாளடைவில் அது பழுதாகிக் கிழிந்துவிட்டது. இதைக் கண்டு மனு அவருக்குப் புதிய கம்பளித் துணி ஒன்றைக் கொடுத்தாள்.

காந்தியடிகள் அவளிடம் கூறினார், "நீயோ ஒரு காசும் சம்பாதிப்பதில்லை, நானும் சம்பாதிப்பதில்லை. அல்லது செலவுகளுக்காகப் பணம் அனுப்புவதற்கு உன்னுடைய தந்தையாரைப் போன்று, எனக்குத் தந்தையார் இருக்கிறாரா? நானோ பரம ஏழை. இவ்வாறு பழைய துணியை எறிய என்னால் முடியாது. அந்தப் பழைய துணியை என்னிடம் கொண்டு வா. அதைத் தைத்து ஒட்டுப்போட்டுக் கொள்வேன்."

மனுவுக்கு நன்றாய்த் தெரியும், காந்தியடிகள் சொன்னபடியே செய்வாரென்று. அவள் ஊசியும் நூலையும் கொண்டு வந்தாள். உடனே காந்தியடிகள் அதைத் தைப்பதற்கு உட்கார்ந்து கொண்டார். இரவு 11.30 மணி அடித்ததும், "இப்பொழுது நான் தைக்கிறேன்" என்று மனு கூறினாள்.

அதற்கு காந்தியடிகள், "நீ பார்த்துக் கொண்டிருந்தாலே போதும், எனக்கு இந்த வேலை செய்ய வருகிறதா இல்லையாவென்று கவனித்துக் கொண்டிரு," என்றார்.

அவர் வேலையை முடித்துவிட்ட பிறகே எழுந்தார். மனு பார்த்தாள். தேர்ந்த தையல்காரனோ அல்லது திறமையான பெண்ணோ செய்தாற் போன்று அவ்வளவு நேர்த்தியாகத் தையல் போடப்பட்டிருந்தது. ஓரம் வரைக்கும் ஒரே நேராகத் தைக்கப்பட்டிருந்தது.

Koviloor Digital Library

② ஒருமுறை காந்தியடிகளிடம் ஒரு வணிகர் வந்தார். சிறிது நேரம் ஏதோ பேசிக் கொண்டிருந்தார். பின்னர்த் திடீரென்று குறைப்பட்டுக்கொண்ட குரலில், "பாபு பார்த்தீர்களா, இந்த உலகம் எவ்வளவு நாணயமற்றுப் போய் விட்டது. ஐம்பதினாயிரம் ரூபாய் செலவழித்து நான் ஒரு தரும சத்திரத்தைக் கட்டுவித்தேன். இப்போது சத்திரம் கட்டி முடித்த பின்னர், நானே அதன் செயற்குழுவிலிருந்து விலக்கப்பட்டிருக்கிறேன். அது கட்டப்படுவதற்கு முன் எவருமே வந்தார்களில்லை. கட்டி முடித்த பின்னர் அதிகாரம் செலுத்த ஐம்பது பேர் கூடி விட்டார்கள்" என்றார்.

வணிகர் பேசியதைக் கேட்டு காந்தியடிகள் சற்றுச் சிந்தித்த வண்ணமிருந்தார். சிறிது நேரம் கழித்து, "நீங்கள் இவ்வளவு சஞ்சலமடைவதற்குக் காரணம் "தானம்" என்ற சொல்லின் பொருளைச் சரியாக உணராததுதான். எந்தப் பொருளையாவது கொடுத்து மாற்றாக ஏதேனும் பெற ஆசைப்படுவது தானமல்ல; அது வியாபாரமாகும். நீங்கள் வியாபாரம் நடத்தி விட்ட பிறகு அதனால் ஏற்படக்கூடிய லாப நஷ்டத்திற்கு ஆயத்தமாயிருக்க வேண்டும். லாபமும் ஏற்படலாம், நஷ்டமும் உண்டாகலாம்" என்றார்.

இதைக் கேட்ட வணிகர் வாய் அடங்கிப் போனார்.

③ வங்காள யாத்திரையின்போது ஒரு சமயம் பெரிய ஜமீன்தார் ஒருவர் வீட்டில் காந்தியடிகள் தங்கியிருந்தார். அவர் மிகவும் பெரிய மனிதர். அவருடைய வீட்டில் பணியாள்கள் பலர் இருந்தனர். எப்பொழுதும் வீட்டின் நாலாபக்கமும் ஒரே அமர்க்களமாயிருந்து.

ஒரு நாள் காந்தியடிகள், வழிபாட்டிற்காக வீட்டுத் தாழ்வாரத்தில் அமர்ந்தார். இருட்டில் வழிபாடு செய்வது அவருடைய வழக்கம். எனவே, வழிபாடு செய்யத் தொடங்குமுன் விளக்குகளை அணைக்கும்படி அவர்

Koviloor Digital Library

நிலச்சுவான்தாரிடம் சொன்னார். விளக்குப் பித்தான் (Switch) ஜமீன்தாருடைய தலைக்கு நேர் மேலே இருந்தது; இருந்தாலும் அவர் பெரிய மனிதரல்லவா. வழக்கப்படி அவர் தம்முடைய பணியாளைக் கூப்பிட்டார். இதற்குள் காந்தியடிகள் தாமே எழுந்து பித்தானை அழுத்தினார். வெளிச்சம் அடங்கியதும் வழிபாடு தொடங்கியது.

வழிபாடு முடிந்து சொற்பொழிவின்போது காந்தியடிகள் குறிப்பிட்டார்: "இன்றைய படித்தவர்களுக்கும், பணம் படைத்தவர்களுக்கும் உடலுழைப்பது பிடிப்பதில்லை, அவர்கள் வெட்கமடைகிறார்கள். ஆனால் இது தவறு. உடலுழைக்காமல் உண்பவன் திருடன் என்று கீதை சொல்கிறது."

மேஜையின் மீது ஒரு பீங்கான் கோப்பை வைக்கப்பட்டிருந்தது, கூட்டத்தில் யாருடைய கைபட்டோ கீழே விழுந்து அது துண்டு துண்டானது. இதைக் கண்டவுடன் நிலச்சுவான்தார் தம்முடைய உயரமான இருக்கையிலிருந்து குதித்து, உடைந்த பீங்கான் துண்டுகளை ஒவ்வொன்றாகப் பொறுக்கலானார். ஓசையைக் கேட்டுப் பணியாள்கள் அங்கே விரைந்து வந்தனர். அவர்கள் கண்டதென்ன? அவர்களுடைய முதலாளி குனிந்து பீங்கான் துண்டுகளைப் பொறுக்கிக் கொண்டிருந்தார்! வைத்தகண் வாங்காமல் அவர்கள் அதைப் பார்த்துக்கொண்டே இருந்தனர்.

4 "வெள்ளையனே வெளியேறு" இயக்கத்தின் போது புகழ் பெற்ற காங்கிரஸ் தலைவர் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரி அவர்களுக்கும் காந்தியடிகளுக்கும் கருத்து வேற்றுமை ஏற்பட்டிருந்தது. அதனால் பல தப்பெண்ணங்கள் பரவியிருந்தன. எனவே காந்தியடிகள்

Koviloor Digital Library

ஆகாகான் மாளிகையிலிருந்து விடுதலையானதும் ராஜாஜி உடனே அவரைக் காண மிக்க ஆர்வங்கொண்டிருந்தார்.

அவர்கள் சந்தித்தார்கள். அன்று திங்கட்கிழமை. காந்தியடிகளின் வாராந்தர மௌன நாள். ஆகவே துண்டுக்காகிதங்களில் எழுதி அவர் உரையாடிக் கொண்டிருந்தார். சில நாள்கள் சேவாக் கிராமத்திற்கு வந்து இருக்க வேண்டும் என்ற செய்தியை அவர் ராஜாஜிக்கு விளக்க விரும்பினார். அதற்கு ராஜாஜி பதில் கூறினார், "நான் 30-ஆம் தேதிக்குள் சேவாக்கிராமம் வரமுடியும்".

"அது வரை நான் உங்களை எதிர்நோக்குவேன்" என்று காந்தியடிகள் எழுதினார்.

ராஜாஜி : "தங்கள் விருப்பப்படி"

காந்தியடிகள் : உங்களை எதிர்நோக்குவேன் என்பதற்குப் பொருள் என்ன?

ராஜாஜி : "சிற்சில நேரங்களில் இடைஞ்சல்களையும் எதிர்நோக்க வேண்டியிருக்கிறது."

காந்தியடிகள் : "நீங்கள் இவ்வாறு சொல்லலாம். ஆனால் நான் அவ்வாறான இடையூறுகளையும் விரும்புகிறேன். பல விஷயங்களைக் குறித்து உங்களுடன் நான் கலந்தாலோசிக்க வேண்டியிருக்கிறது."

ராஜாஜி : "அதற்குள் நாமிருவரும் நம்முடைய சில விஷயங்களை மறந்துவிடுவோம் என்று நம்புகிறேன். அப்போது நாமிருவரும் எந்த விஷயத்தைப் பற்றியும் கலந்தாலோசிக்க வேண்டியிராது."

காந்தியடிகள் : "அப்படியானால் அப்போது நாமிருவரும் சேர்ந்து சிரிப்போம்; பருமனடைவோம்."

Koviloor Digital Library

⑤ அந்நாள்களில் காந்தியடிகள் ராஜ்கோட்டில் உண்ணா நோன்பு மேற்கொண்டிருந்தார். இரண்டு அல்லது மூன்றாவது நாளாக இருக்கலாம். திடீரென்று கஸ்தூர்பா அவருக்கு முன்பாக வந்து நின்றார்.

காந்தியடிகள் கேட்டார், "நீ எவ்வாறு இங்கே வந்தாய்?"

கஸ்தூர்பா விரும்பினால் காந்தியடிகளைப் போய்ச் சந்திக்கலாமென்று அரசு அவருக்குத் தெரிவித்திருந்தது. எனவே அவர் அங்கே வந்திருந்தார். ஆனால் இரவு ஆன போதிலும் அவரை அழைத்துச் செல்ல யாரும் வரவில்லை. ஒருகால் இந்தச் சாக்கில் அவரை விடுதலை செய்ய அரசு எண்ணியிருக்கலாம். அவர் சிறையில் அல்லவா இருந்தார்! ஆனால் காந்தியடிகள் இவற்றை யெல்லாம் எங்ஙனம் பொறுத்துக் கொண்டிருப்பார்? அவர் சொன்னார், "விடுதலை செய்வதானால் அரசு அனைவரையும் விடுதலை செய்யட்டும். அதுவும் சட்டப்படி விடுதலை செய்யட்டும்."

இதுபற்றி நினைத்துக் கொண்டிருந்தே இரவு ஒருமணி அடித்தது. சிறையிலிருந்து யாரும் வரவில்லை. தாமாகவே திரும்பிச் செல்லுமாறு கஸ்தூர்பாவிடம் அப்போது காந்தியடிகள் கூறினார்.

அங்கிருந்த ஒருவர் சொன்னார், "பாபு, வழி மூடப்பட்டிருக்கிறது. நுழைவுச்சீட்டு இல்லாமல் அங்கு யாரும் உள்ளே போக முடியாது. அவர்கள் 'பா'வை வழியிலேயே தடுத்து நிறுத்திவிடுவார்கள்."

பாபு, 'பா'விடம் உன்னை யாரேனும் வழியில் நிறுத்துவார்களானால் நீ அந்த இடத்திலேயே சத்தியாக்கிரகம் செய். அங்கேயே உறுதியாக நில். இரவு முழுவதும் அங்கேயே இருக்க வேண்டி ஏற்பட்டாலும் அதனால் என்ன?

Koviloor Digital Library

காந்தியடிகளிடம் 'பா' எந்தவிதமான வாதமும் செய்ய முடியாது. அவர் பேசாமல் அங்கிருந்து புறப்பட்டார். ஆனால், அவரை இரவு முழுவதும் தெருவில் நிற்க வைப்பதற்கான துணிச்சல் அரசுக்கு இல்லை. அரசாங்கம் அவரை மறுபடியும் பிரயாணிகள் விடுதிக்கு அழைத்துச் சென்றது. பின்னால் காந்தியடிகள் இதுபற்றி அரசுக்கு ஒரு கடிதம் எழுதினார். மறுநாள் 'பா' முதலானவர்கள் சட்டப்படி முறையாக விடுதலை செய்யப்பட்டனர். அதன்பின் கஸ்தூர்பா காந்தியடிகளிடம் வந்து சேர்ந்தார்.

⑥ அந்தமுறை காந்தியடிகள் டில்லியிலுள்ள பிர்லா மாளிகையில் ஏறக்குறைய ஐந்து மாதங்கள் தங்கினார். வழக்கப்படி அவருடன் ஒரு பெரிய கூட்டமே வந்தது. புதுப்புது அன்பர்கள் அங்கு வருவதும் பழையவர்கள் போவதும் நடந்து கொண்டிருந்தன. மாளிகை முழுவதுமே அவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஏன்? பிர்லாஜியும் அவருடன் இருந்தவர்களுமே விரும்பாத அநேக விருந்தினர் காந்தியடிகளிடம் வந்தார்கள். பிர்லா மாளிகையில் குண்டு விழுந்தபிறகு, அவர், பெரிய கூட்டங்களில் நுழைந்து போவதைப் பலர் ஒப்புக்கொள்ளவில்லை. சர்தார் வல்லபபாய் படேல் அடிகளுக்காக மிலிடரி போலீஸாரையும், ஒற்றர்களையும், பிர்லா மாளிகையில் ஆங்காங்கே காவல் செய்ய நியமித்திருந்தார். அவர்கள், கூட்டத்தில் அங்கு இங்கும் சுற்றிக் கொண்டிருப்பார்கள். இருப்பினும் இவற்றால் எல்லாம் காந்தியடிகளுக்குப் பாதுகாப்புக் கிடைத்துவிடாது என்பது எல்லோருக்கும் தெரியும். அங்கு வருபவர்கள் அனைவரையும் சோதிக்க வேண்டுமென்று போலீஸ் நினைத்தது. ஆனால் காந்தியடிகள் அதை நிறுத்தி விட்டார். எந்தக் கேள்விக்கும் அவரிடம் ஒரே விடைதான், "இராமனே என்னுடைய காவலன்".

Koviloor Digital Library

போலீஸின் இந்தக் கெடுபிடி பிர்லாஜிக்கே பிடிக்கவில்லை. அவர் காந்தியடிகளிடம், "என்ன? வழிபாட்டைக் கூட நாம் துப்பாக்கியின் நிழலில் நடத்துவது தங்களுக்கு முறையற்றதாகத் தோன்றவில்லையா? தங்களுடைய உயிர் மிகவும் விலை உயர்ந்ததாகும். எனினும் போலீஸின் இம்மாதிரியான அளவுக்கு மீறிய அதிகமான கட்டுப்பாட்டை விரும்புகிறீர்களா?" என்று கேட்டார்.

பிர்லாஜியின் கருத்துக்கு இசைவு தெரிவித்த காந்தியடிகள், "இதைப்பற்றி நீங்கள் வல்லபபாயுடன் பேசுங்கள். அவர்தாம் இவ்வளவு ஏற்பாட்டையும் செய்தவர். இவ்வகையான ஏற்பாட்டை நான் வெறுத்து வந்தவன். ஆனால், இவை அனைத்தையும் நான் என்னுடைய பாதுகாப்பிற்காக அல்ல, அரசாங்கத்தின் புகழ் பாதுகாக்கப்படுவதற்காக, பொறுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது". என்று கூறினார்.

7 நவகாளி யாத்திரையில் காந்தியடிகளின் பேத்தி மனு அவரோடு இருந்தாள். ஒரு சமயம் பேச்சு வாக்கில் அவள் காந்தியடிகளிடம் சொன்னாள், "பாபூ, இந்த சுராவர்த்தி இப்போது சற்றும் திருந்தமாட்டான். அவனுடைய கடிதத்தைப் பாருங்களேன். எப்படியெல்லாம் எழுதியிருக்கிறான். இப்பேர்ப்பட்டவனுக்குமா தாங்கள் இவ்வளவு பணிவோடு கடிதம் எழுதுகிறீர்கள்!"

காந்தியடிகள் அவள் கூறியதை ஆமோதிப்பார் என்று மனு நம்பியிருந்தாள். ஆனால் அவர் கடுமையான குரலில் கேட்டார்: "சுராவர்த்தியைப் பற்றி 'அவன்- இவன்' என்ற சொற்களை நீ எவ்வாறு பயன்படுத்தலாம்? அவர் வயதில் உன்னைவிடப் பெரியவர். ஒரு பெரிய மாநிலத்தின்

Koviloor Digital Library

முதலமைச்சர் ஆகிய அவரைப்பற்றி நீ மரியாதையுடன் பேச வேண்டும். ஒன்று நீ அவரை, "சுராவர்த்திபாய்" என்று சொல்ல வேண்டும், அல்லது "சுராவர்த்திசாகப்" என்று சொல்ல வேண்டும். பேசும் மொழியில் பண்பின்மையும் விவேகமின்மையும் இருக்குமானால் அதையும் இம்சை என்றே நான் சொல்வேன்."

"ஆங்கிலேயர்களிடத்தில் பல நல்ல பழக்கங்கள் இருந்தன. அவற்றை நாம் பின்பற்றவில்லை. சிறிய வேலைக்காரனிடமும் ஏதாவது ஒன்றைக் கேட்பார்களானால் அவர்களிடம் 'பிளீஸ்' (தயவு செய்து) என்ற சொல்லைப் பயன்படுத்துவார்கள். வேலை செய்து முடிந்த பிறகு தாங்க்யூ (நன்றி) என்று சொல்லாமல் இருப்பதில்லை. வீட்டிலும் பள்ளியிலும் நமது குழந்தைகளுக்குப் பண்புடன் பேசக் கற்றுக் கொடுக்காத வரையில், நமது நாடு எந்த வகையிலும் முன்னேற முடியாது. பாரதத்தின் விடுதலை என்னும்போது நான் மிகப் பரந்த பொருள் கொள்கிறேன். சமூக, பொருளாதார, தார்மீக அடிப்படையில் மேம்பாடு அடையாதவரை பாரதத்தை நான் விடுதலை நாடு என்று கருதமாட்டேன்."

8 காந்தியடிகள் எரவாடா சிறையில் இருந்த காலம். அவர் தமக்காகத் துணி தைக்கும் வேலையைக் கேட்டு வாங்கிக் கொண்டார். அவரோ கர்மயோகி. சும்மா உட்காருவது எப்படி? ஒரு நாள் முக்கியமான சிறை அலுவலர் ஒருவர் அவரைக் காணவந்தார். காந்தியடிகள் அமர்ந்து நூற்றுக் கொண்டிருந்தார். அலுவலர், அடிகள் அமர்ந்திருந்த இடம் வரையிலும் செருப்புக் கால்களுடன் வந்தார். காந்தியடிகளிடம் க்ஷேம லாபங்களை விசாரித்தார். வேறு சில கேள்விகளையும் கேட்டார். காந்தியடிகள் என்றும் போல் தம்முடைய நகைச் சுவை

Koviloor Digital Library

நிரம்பிய பாணியில் பதிலுரைத்தார். சிறிது நேரம் கழித்துச் சிறை அலுவலர் அங்கிருந்து சென்றார். பின்னர் காந்தியடிகள் ஒரு வாளி நிறையத் தண்ணீர் கொண்டு வந்தார். எந்த இடத்தில் அந்த அலுவலர் செருப்புக் கால்களுடன் அமர்ந்திருந்தாரோ அந்த இடத்தை நன்றாகக் கழுவித் துப்புரவு செய்தார்.

"பாபு, இதென்னெ செய்கிறீர்கள்?" என்று அவருடைய சிறை நண்பர் ஒருவர் கேட்டார்.

காந்தியடிகள் : "இது நான் புழங்குமிடம். இதை நான் சுத்தமாக வைத்திருக்கக் கூடாதா?"

நண்பர் : "சரி, அசுத்தம் செய்தது யார்?"

காந்தியடிகள் : "நீங்கள் பார்க்கவில்லையா, அந்த அலுவலர் செருப்புக் கால்களுடன் இதுவரை வந்ததை?"

நண்பர் : "தாங்கள் அவரிடம் ஏன் சொல்லவில்லை? 'தயவு செய்து செருப்பைக் கழற்றி வைத்து உள்ளே வரவும்' என்று பலகையில் எழுதி இங்கே தொங்கப் போடுங்கள்."

காந்தியடிகள், "பலகை மாட்ட வேண்டிய அவசியமென்ன? இந்த விஷயத்தை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். நல்லது. நீண்ட நாள்களுக்குப் பின்னர் இன்று கையால் துப்புரவு செய்யக் கூடிய வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. புண்ணியமான பணியைச் செய்ய வாய்ப்பளித்த தற்காக நான்தான் அந்த அலுவலருக்கு நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்" என்றார்.

* * * * *

KOVILOOR ANDAVAR LIBRARY KOVILOOR 35776

Koviloor Digital Library

வாழ்த்துக்களுடன்



சி.எஸ்.என்.சௌரிராஜன்

தி.நகர், சென்னை – 17.

ந.காந்தி

சியாமளா பிரசிங் மெட்டல் பாண்ட்ஸ், பி.லிட்., மதுரை – 7.
சக்தி இண்டஸ்ரீஸ், மதுரை – 5.

எம்.எஸ்.சுந்தரவேல்

இந்தியன் புட்ஸ்

சொ.ராம்குமார்

பள்ளத்தூர்

Koviloor Digital Library

வாழிய நலம்!

12-12-2018

நம்பிக்கை, நல்ல தரம், காலந்தவறாமை..
எழுபத்து இரண்டு ஆண்டுகளாய் எங்களின்
ஏற்றமிகு பயணத்துக்கு அடிநாதம்.



e-mail : vijayaprinters1947@gmail.com

உங்களின் உன்னத ஒத்துழைப்பு
எதனையும் எங்களுக்குச் சாத்தியமாக்கியது
அச்சுத்துறையின் அடுத்தடுத்த மாறுதல்களுக்கு
நாங்களும் பயணித்தோம்.

உங்கள் எண்ணங்களை
வண்ணங்களாக்கித் தந்தோம்
இன்று எங்களோடு நீங்கள்
என்றும் உங்களை விட்டகலாமல் நாங்கள்.

எல்லாம் கடந்து போகும் என்றாலும்
கடந்துபோன காலங்களை
கனிவுடன் கவனிக்கும் தருணமிது
உங்களுக்கு நெஞ்சார்ந்த நன்றி சொல்லும் நேரமிது.

அன்பையும் அடிப்படை அறத்தினையும்
ஆதார சுருதியாகக் கொண்ட எங்களுக்கு
தொடர்ந்து ஆதரவுக் கரம் நீட்டுங்கள்
இணைந்த பயணத்தில்.. இடையறாத வெற்றி காண்போம்.

நன்றியுடன்
'மனிதத்தேனீ'

விஜயா பிரிண்டர்ஸ்
114/2, டி.பி.கே.ரோடு, மாலைமுரசு அருகில்,
மதுரை - 625 001.

விஜயா பிரிண்டர்ஸ், மதுரை-1 0452-430829, 73055 33980